1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். தமிழ்நாடு அரசு இந்திய தணிக்கைத்துறைத் தலைவருடன் கலந்தாலோசித்து திரு. ஜி. துவாரகநாதன், ஐ.ஏ. & ஏ.எஸ். அவர்களை அயல் துறைப் பணி வரையறைகளின் கீழ் 28—6—1971 முதல் இரண்டு ஆண்டுக் கால அளவுக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முழுநேர நிதி இயக்குநராக நியமித்துள்ளது. இவர் மேற்படி கழகத்திடமிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,800-லிருந்து 2,000 வரை என்ற வீதத்தில் சம்பளமும் விதிகளின்கீழ் அனுமதிக்கத்தக்க அகவிலைப்படியும் பிற படிகளும் பெற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Titanium factory in Tamil Nadu

*83 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Titanium Factory in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இந்திய அரசுக்குச் சொந்தமான 'தி இண்டியன் ரேர் எர்தஸ் லிமிடெட்' என்னும் நிறுவனம் 90 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் டிடானியம் டை ஆக்ஸைட் கொண்ட சுத்திகரித்த இல்மினைட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது பற்றி யோசித்து வருகிறது. அந்த ஆலை தமிழ் நாட்டிலோ, கேரளாவிலோ, ஒரிஸ்ஸாவிலோ நிறுவப்படுவது சாத்தியம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, it is an important question and a supplementary question may be allowed.

Scooter factory in Public sector

*84 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a scooter factory in public sector; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாக் கேள்விகளும் மிக முக்கியமான கேள்விகள்தான். 50 கேள்விகள் கேட்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு கேள்விக்கும் துணைக் கேள்விகள் வேண்டும் என்றால் 20 கேள்விகள் மட்டும் பேரவையில் கேட்கச் சொல்லிவிட்டு, மற்றவைகளைப் பிரிண்ட் செய்துதான் வைக்க வேண்டியிருக்கும் என்று பலமுறை சொல்லியாகிவிட்டது. ஒன்று, கேள்விகள் கேட்கத்தான் வேண்டுமென்றால் கேளுங்கள், அதற்கும் சம்மதம்தான். அல்லது, எவ்வளவு கேள்விகள் கேட்பது என்று வைத்துக்கொள்ளலாம். 20 கேள்விகளைக் கேட்டுவிட்டு 30 கேள்விகளை பிரிண்ட் பண்ணிவைத்துவிடலாம்.